

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2023) சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, முனைவர் க.பொன்முடி, எ.வ. வேலு, மு.பெ.சாமிநாதன், எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், கீதாஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கே.சேகர் பாபு, மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

விடுதலை போராட்ட வரலாற்றில் நீங்கா இடம் பிடித்த மாவீரன்

# அழகு முத்துக்கோன் புகழ் மங்காது ஒளிவீசிடும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 12–

விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த மாவீரன் அழகுமுத்துக்கோனின் வாழ்வும் போராட்டமும் என்றும் புகழ் மங்காது ஒளிவீசிடும் என்று அவரது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டி பதிவிட்டுள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**தமிழ்நிலத்தின் தலைவணங்கா வீரத்துக்கும் தலைசான்ற தியாகத்துக்கும் தன்னிகரற்ற அடையாளமாக விளங்கும் மாவீரர் அழகு முத்துக்கோனின் பிறந்தநாள்.**



**ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தியாவின் பல பகுதிகளும் கிளர்ந்தெழுவதற்கு முன்பே அதைச் செய்து, விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த அழகு முத்துக்கோனின் வாழ்வும் போராட்டமும் என்றும் புகழ்மங்காது ஒளிவீசிடும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.7.2023) தலைமைச் செயலகத்தில், இந்திய கூடைப்பந்து சம்மேளத்தின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட ஆதவ் அர்ஜுன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



நேற்று (11.07.2023) புதுடெல்லி விஞ்ஞான் பவனில், ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற 50வது சரக்கு மற்றும் சேவை வரி (GST) கவுன்சில் கூட்டத்தில், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்துகொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயசந்திரன் மற்றும் வணிகவரித் துறை ஆணையர் தீரஜ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அரசின் வருமானத்திற்காக மது விற்கவில்லை!

## அமைச்சர் முத்துசாமி பேட்டி!

சென்னை, ஜூலை 12 -

அரசின் வருமானத்திற்காக மது விற்கவில்லை என்று அமைச்சர் முத்துசாமி கூறினார். சென்னை தலைமைச் செயலகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி தலைமையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மாவட்ட நிலை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உள்துறை முதன்மைச் செயலாளர் அமுதா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ரத்னா, தமிழ்நாடு மாநில வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் விசாகன் ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் அமைச்சர் முத்துசாமி அளித்த பேட்டி வருமாறு: -



டாஸ்மாக் கடைகளுக்கும், கடையில் வசூலான பணத்தை செலுத்தும் ஊழியருக்கும் பாதுகாப்பு தேவை. வங்கி ஊழியரே கடைக்கு சென்று பணத்தை பெற்றுக்கொள்ளலாமா? என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம். சென்னையில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் அது செயல்படுத்தப்படும்.

**வருமானத்திற்கு அல்ல**

மது விற்பனை செய்வது வருமானத்திற்கான நோக்கமல்ல. விற்பனையில் இலக்கு நிர்ணயிக்கப்படுவது, வருமானத்தை கூட்டுவதற்காக அல்ல. மது விற்பனை குறைந்தால் அதற்கு காரணம் என்ன? மது குடிப்பதை யாரும் நிறுத்தி இருக்கிறார்களா? அல்லது, மாற்றாக வேறு தவறான இடத்திற்கு செல்கிறார்களா? என்பதை கண்டறியவே இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.

டாஸ்மாக் பாட்டில்களால் பல பிரச்சினைகள் உள்ளன. கண்ட இடங்களிலும் அவை வீசப்பட்டு விடுகின்றன. எனவே மது பாட்டிலுக்கு பதிலாக 'டெட்ரா பாக்கெட்' வர வேண்டும் என்று பல தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர். குறுகிய இடத்தில் அவற்றை வைக்கலாம். அவற்றை கையாள்வது எளிது. அதோடு உடைந்து நஷ்டம் ஏற்படுவது இருக்காது. எனவே அதனடிப்படையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. டெட்ரா பேக் மூலம் விற்பனை செய்து, அதை மறு சுழற்சியாக மீண்டும் பயன்படுத்தலாம்.

**கடை திறக்கும் நேரம்**

அதுபோல கடை திறக்கும் காலநேரம் பற்றி ஆய்வு செய்தபோது, காலை 7 மணியில் இருந்து 9 மணி வரை கட்டிட வேலை போன்ற கடுமையான உடலுழைப்பு வேலைக்கு செல்பவர்கள் மது கிடைக்காமல் சிரமம் அடைகிறார்கள் என்று கண்டறிந்தோம். அவர்களுக்காக என்ன ஏற்பாட்டை செய்யலாம்? என்பதில் இன்னும் முடிவெடுக்கவில்லை.

**கள் விற்பனை வருமா?**

உடலுக்கு நன்மை தரும் கள்ளை விற்பனை செய்வது பற்றி கேட்டால், விவசாயிகளை மனதில் வைத்து அதை செய்யலாம் என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுகிறது என்பது மிக அருமையான விஷயம். விவசாயிகளின் நன்மை என்பதில் முதல் அமைச்சருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் கள் விற்பனையில் ஈடுபட்ட மாநிலங்களில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அங்கு நடக்கும் தவறுகள் இங்கு வந்துவிடக் கூடாது என்பதையும் பார்க்க வேண்டியதுள்ளது. இது பற்றி ஆய்வு செய்ய தனி கமிட்டியை நியமிக்க இருக்கிறோம். அதை ஒழுங்கு செய்த பிறகுதான் கள் விற்பனை பற்றி யோசிக்க முடியும். அந்த ஆய்வில், அந்த தவறுகளை கட்டுப்படுத்திவிட முடியும் என்று சொன்னால் அதுபற்றி சிந்திப்போம். முதலில் ஆய்வறிக்கை வரட்டும். எம்.ஆர்.பி. விலைக்கு கூடுதலான விலைக்கு மது விற்பனை செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உயர் அதிகாரிகளுக்கு அதுபற்றி வந்த தகவல் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் மிகச் சில புகார்கள்தான் வந்தன.

இவ்வாறு அவர் கூறினார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

புதுக்கோட்டை, ஜூலை 12 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி தெற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பாக தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், கறம்பக்குடி தெற்கு ஒன்றியச் செயலாளர் தவ.பாஞ்சாலன் வரவேற்புரையிலும் வெட்டன்விடுதியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ். பாரதி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் சட்டத் துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ். ரகுபதி, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஷ்வரி, க. மதியழகன், எம். லியாகத்அலி, சுப.சரவணன், சு.சண்முகம், ஆ.செந்தில், வெ.முத்துக்கிருஷ்ணன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, மழையூர் ராமசாமி, கமலா செல்வம், கலைஞர்.மு.கருணாநிதி, வடவாளம் க.செ.மணிமாறன், அன்சாரி பாஷித் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாநகராட்சி, மருதாணிகுளம் பகுதியில் ரூ.24.96 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய சுகாதார வளாகத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர் எஸ்.ராஜப்பா, மாநகராட்சி ஆணையாளர் திருமதி ரா.மகேஸ்வரி, மண்டல தலைவர்கள் பிலால் ஹூசைன், ஆனந்த், ஜான்பீட்டர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

சேலத்தில் 28வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு

# மாணவ - மாணவியர்களுக்கு மருத்துவர் பட்டங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சேலம். ஜூலை 12-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 28வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் (10.07.2023) நடைபெற்றது. பின்னர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் பயிலும் மாணவ, மாணவிகளின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பிற்காக நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் இன்றைய தினம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் 28வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இக்கல்லூரியில் 100 மாணவ, மாணவிகள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 95 மாணவ, மாணவிகள் மருத்துவர் பட்டம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.35 கோடி செலவில் செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கான கட்டடமும், ரூ.80 இலட்சம் செலவில் நவீன நரம்பியல் அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்களும், ரூ.5 கோடி மதிப்பீட்டிலான நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையப் விரைவில் துவங்கப்படவுள்ளன.

மேலும், சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் ஆகிவற்றிற்குத் தேவையான படுக்கை வசதி, ஆய்வுக் கூடங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மற்றும் புதிய கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, இக்கல்லூரியின் மாணவ, மாணவிகளின் சேர்க்கையை அதிகரிக்க வேண்டுமென கோரிக்கை வரப்பெற்றுள்ளது. இதுகுறித்து ஒன்றிய அமைச்சரிடம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக மாணவ, மாணவிகள் சேர்க்கைக்கான இடம் குறித்தும், அடுத்த ஆண்டுக்குள் கூடுதலாக 50 எண்ணிக்கையிலான இடங்களை அதிகரிக்கப்பதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கவுள்ளோம். அதற்கான போதிய மருத்துவக் கட்டமைப்புகள் மற்றும் பேராசிரியர்கள் இங்கு உள்ளனர்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மணி, மருத்துவக் கண்காணிப்பாளர் மரு. தனபால், துணை முதல்வர் மரு.தேன்மொழி உட்பட தொடர்புடைய அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

நெல்லை - பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரிக் கலையரங்கில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

## ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்!

நெல்லை, ஜூலை 12-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் - மற்றும் மாணவர் வினா விடையரங்கம் நிகழ்ச்சி நெல்லை - பாளையங்கோட்டையில் உள்ள சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி கலையரங்கத்தில் நாளை (13.7.2023) காலை 10 மணியளவில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் ச.மகாதேவன் வரவேற்புரையாற்றுகிறார்.

கல்லூரி முதல்வர் முனைவர் சே.மு.அப்துல் காதர் வாழ்த்துரை வழங்குகிறார்.

கல்லூரி தாளாளர் ஹாஜி த.இ.செ. பத்ஹீர் ரப்பானி தலைமையுரையாற்றுகிறார்.

இக்கருத்தரங்கில் கழக துணைப்பொதுச்செயலாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றி - மாணவ, மாணவியர் கேட்கும் கேள்விகளுக்கு பதிலுரை வழங்குகிறார்.

கல்லூரி துணை முதல்வர் முனைவர் எஸ்.எம்.ஏ. செய்யது முகமது காஜா நன்றி கூறுகிறார்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வந்த செய்தி!

